செ.வெ.எண் : 356 நாள் : 17.11.2021

**காஞ்சிபுரம் மாவட்டம் வரதராஜபுரம் ஊராட்சியில் நடைபெற்று வரும் வெள்ள தடுப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மா.ஆர்த்தி இ.ஆ.ப அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியம், வரதராஜபுரம் ஊராட்சியில் உள்ள புவனேஸ்வரி நகர் பகுதியில் நடைபெற்று வரும் வெள்ள தடுப்பு பணிகளை இன்று (17.11.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மா.ஆர்த்தி இ.ஆ.ப அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

**மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது :**

கடந்த ஒரு வாரமாக அனைத்து வெள்ளம் பாதித்த பகுதிகளில் மீட்பு பணிகள் நடைபெற்று கொண்டிருக்கின்றது. அதிகம் பாதிக்கப்பட்ட இடங்களான மகாலட்சுமி நகர், அஷ்டலட்சுமி நகர் போன்ற இடங்களில் இருந்து தண்ணீர் பம்பு மோட்டார்கள் வைத்து வெளியேற்றப்பட்டுள்ளது. மீண்டும் நாளை காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு ரெட் அலர்ட் கொடுக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 200mm மழைப்பொழிவின் அளவு எதிர்பார்க்கிறோம். அதற்க்கு ஏற்றவாறு எங்கெல்லாம் கடந்த மழைப்பொழிவில் அதிக பாதிப்பு ஏற்படடுள்ள இடங்களில் நீர்வள ஆதாரத்துறையின் அலுவலர்கள் கடந்த 5 நாட்களாக எல்லா வேலைகளையும் துரிதமாக செய்து உள்ளார்கள். 50 ஆயிரம் மணல் மூட்டைகள் கொண்டு கடந்த மழையில் பாதிக்கப்பட்டுள்ள இடங்களில் தற்காலிகமாக சரிசெய்யப்பட்டுள்ளது. மேலும் கடந்த முறை பிரச்சனையாக இருந்த இடங்களில் மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த மழையில் மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தற்காலிகமாக பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

செம்பரம்பாக்கம் ஏரியின் நீர்வரத்து மற்றும் உபரிநீர் திறப்பு ஆகியவை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது நீர் வரத்தைப் பொருத்து உபரிநீர் 2000 கன அடியாக வெளியேற்றப்பட்டு வருகிறது. ஏரிக்கு வரும் நீரின் அளவு உயர்ந்த வருவதை தொடர்ந்து உபரிநீர் முழுமையாக திறந்துவிடமல், பாதிப்பு ஏற்படாவண்ணம் உபரிநீர் படிப்படியாக வெளியேற்றப்பட்டு வருகிறது. தற்போது மழைப்பொழிவு இல்லாதபோதிலும், நாளை மழைக்கு வாய்ப்பு உள்ளதென வானிலை ஆய்வு மைய்யம் அறிவிப்பினைத் தொடர்ந்து முன்னெச்சரிக்கையாக உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

அடையாற்றினை சுற்றியுள்ள 34 கி.மீ. தொலைவிலிருந்து மழை நீர் அடையார் ஆற்றின் வழியாகவே கடந்து கடலில் கலக்க வேண்டும். மழைப்பொழிவின் அளவைப்பொருத்து அடையாற்றில் நீரோட்டம் காணப்படும். சென்ற மழைப்பொழிவு அதிகமாக இருந்ததால் பாதிப்பு சற்று அதிகமாகவே இருந்தது. இந்த முறை மழையின் அளவு குறைவாகவே எதிர்பார்க்கப்படுகிறது. அதிகம் பாதிக்கப்படக்கூடிய இடங்கள் கண்டறியப்பட்டுள்ளது. எனவே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்து முன்னேற்பாட்டு பணிகளும் தயார் நிலையில் உள்ளது.

இவ்வாய்வின் போது ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திருமதி.ஸ்ரீதேவி, செயற்பொறியாளர் திரு.சண்முகம், அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், காஞ்சிபுரம்.**